



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்துக் காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி வழங்கிட 7 முன்னோடி வங்கிகளுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதன் அடிப்படையில், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளால் வழங்கப்பட்ட, விபத்து மற்றும் இயற்கை மரணமடைந்த 5 அரசு ஊழியர்களின் குடும்பத்தினருக்கு விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு தொகை, திருமண உதவித் தொகை மற்றும் உயர்கல்வித் தொகையாக 4 கோடியே 38 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலாளர் (செலவினம்) பிரசாந்த் மு.வடநெரே, கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் திருமதி தி.சாருஸ்ரீ, பாரத ஸ்டேட் வங்கியின் சென்னை வட்டாரத்தின் தலைமை பொது மேலாளர் விவேகானந்த் சௌபே. பொது மேலாளர் ஜோபி ஜோஸ் மற்றும் கனரா வங்கியின் துணை பொது மேலாளர் ராஜேஷ் குமார் வர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ரூ.37.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள

# சிறுவிளையாட்டரங்குகள் - பாரா விளையாட்டு மைதானங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 15 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் புதுக்கோட்டை, திருப்பத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்ட ரங்கங்கள் 3, தென்காசி மாவட்டத்தில் 15 கோடி ரூபாய் செலவில் பல்வேறு விளையாட்டு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், சென்னை, திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா விளையாட்டு மைதானங்கள், கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட விளையாட்டுத் துறை கட்டடங்களின் விவரங்கள்**

2023-24ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினை தூண்டும் வகையில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அதற்கு "முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்" எனப் பெயரிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில், திருவரங்குளம் கிராமத்தில் 6.42 ஏக்கர் பரப்பளவில், 400 மீட்டர் தடகள பாதை (மண்), கால்பந்து மைதானம், கையுந்துபந்து ஆடுகளம், நீளம் தாண்டுதல் பகுதி, பார்வையாளர்களுக்கான இருக்கைகளுடன் கூடிய அரங்கம், உடற்பயிற்சி கூடம், உடை மாற்றும் அறை, நிர்வாக அலுவலகக் கட்டடம், கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயில் ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கம்;

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், நிம்மியம்பட்டு கிராமத்தில் 6.00 ஏக்கர் பரப்பளவில் 400 மீட்டர் தடகள பாதை (மண்), கால்பந்து மைதானம், கையுந்துபந்து ஆடுகளம், கூடைப்பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம், கோகோ ஆடுகளம், நீளம் தாண்டுதல் பகுதி, தடைகள் தாண்டும் ஓடுதளப்பாதை, பார்வையாளர்களுக்கான இருக்கைகளுடன் கூடிய அரங்கம், உடற்பயிற்சிக்கூடம், நிர்வாக அலுவலகக் கட்டடம், கழிப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயில் ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கம்;

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில், சிவன்மலை கிராமத்தில் 6.56 ஏக்கர் பரப்பளவில் இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம், கையுந்துபந்து ஆடுகளம், கூடைப்பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம், உடற்பயிற்சிக்கூடம் மற்றும் நுழைவு வாயில் ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கம்;

தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் 20.46 ஏக்கர் பரப்பளவில் 400 மீட்டர் தடகள ஓடு பாதை (மண்) மற்றும் நீளம் தாண்டுதல், கையுந்துபந்து உள்விளையாட்டரங்கம், கபாடி ஆடுகளம் கொண்ட உள்விளையாட்டரங்கம், கூடைப்பந்து ஆடுகளம், கால்பந்து மைதானம், நவீன உடற்பயிற்சி கூடம், நிர்வாக அலுவலகக் கட்டடம், உணவகம், உடைமாற்றும் அறை, கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட விளையாட்டு வளாகம்;

சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்திலும் மற்றும் திருச்சி, மதுரை, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் பாரா விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், பாராவிளையாட்டு அரங்கம், அரைவட்ட திறந்தவெளி மேற்கூரை கொண்ட பாரா இறகுப்பந்து, உட்கார்ந்து விளையாடும் பாரா கையுந்துபந்து, பாரா டேபிள் டென்னிஸ், பாரா போச்சியா (Boccia), பாரா டேக்வொண்டோ, பாரா ஜூடோ ஆடுகளம், பாரா கோல்பால் (Goal ball) ஆகிய விளையாட்டுகளுக்கான பன்னோக்கு உள்விளையாட்டரங்கம், பாரா பளுதூக்குதல் அடங்கிய உடற்பயிற்சிக்கூடம், சக்கர நாற்காலிகளுடன் அணுகும் வகையிலான சாய்வுதளம் கொண்ட ஆண், பெண் இருபாலருக்கான கழிப்பறைகள் ஆகிய வசதிகளுடன் 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 பாரா விளையாட்டு மைதானங்கள்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில், ஹாக்கி விளையாட்டு மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், நவீன பயிற்சி வசதிகளை உருவாக்கிடவும், 60 மாணவர்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய அறைகள், உணவு உண்ணும் அறை, சமையலறை, இருப்பு அறை, தொலைக்காட்சி கூடம், பார்வையாளர் ஓய்வறை, காப்பாளர் அறை, அலுவலக அறை, விளையாட்டு உபகரணங்கள் வைப்பதற்கான இருப்பு அறை, படிப்பதற்கான அறை மற்றும் பொழுதுபோக்கு அறை, ஆகிய வசதிகளுடன் தரை மற்றும் முதல் தளம் கொண்ட 20,369 சதுர அடி கட்டட பரப்பளவில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம்;

என மொத்தம் 37 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 முதலமைச்சர் சிறுவிளையாட்டரங்கங்கள், 5 பாரா விளையாட்டு மைதானங்கள், தென்காசி மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையம் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதிதாக உருவாக்கப்பட்ட

# நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து நாமக்கல் மாவட்டத்தை செயல் எல்லையாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப. அம்ரித், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஆக. 15 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.8.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை சார்பில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரித்து நாமக்கல் மாவட்டத்தை செயல் எல்லையாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தொடங்கி வைத்தார்.**

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 165 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 4 மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும், 393 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களும், 86 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 26 பணியாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 3 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களும், 5 கூட்டுறவு நகர வங்கிகளும், 7 தொடக்கக் கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளும் மற்றும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளிட்ட 746 சங்கங்கள் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ரூ.76.19 கோடி பங்குத் தொகையுடனும் ரூ.1826.56 கோடி இட்டு வைப்பும் ரூ.1636.07 கோடி கடன் நிலுவையும் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இவ்வங்கியில் 2024-2025ஆம் நிதியாண்டில் 55,583 விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக ரூ.625.81 கோடியும், கால்நடை பராமரிப்புக்கடனாக 14,346 விவசாயிகளுக்கு ரூ.117.86 கோடியும், மத்திய காலக் கடனாக 1,324 விவசாயிகளுக்கு ரூ.13.78 கோடியும், நகைக்கடனாக 1,64,969 நபர்களுக்கு ரூ.1,489.81 கோடியும், மகளிர் சுய உதவிக்குழு கடனாக 1,878 குழுக்களுக்கு ரூ.162.65 கோடியும், 473 மாற்றுத்திறனாளிகளுக்குக் கடனாக ரூ.2.69 கோடியும், 180 விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக்கடனாக ரூ.11.85 கோடியும், 776 கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்குக் கடனாக ரூ.3.99 கோடியும் வழங்கப்பட்டு உள்ளன.

மேலும், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டமான கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.34 இலட்சமும், டாம்கோ திட்டத்தின் கீழ் ரூ.82 இலட்சமும், டாப்செட்கோ திட்டத்தின் கீழ் ரூ.3.91 கோடியும், தாட்கோ திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சமும், கல்விக்கடனாக ரூ.63 இலட்சமும், மூன்றாம் பாலினத்தவர்களுக்கான சிறகுகள் திட்டத்தின் கீழ் ரூ.2.50 இலட்சமும், விதவைகளுக்குக் கடன் தொகையாக ரூ.68 இலட்சமும் இவ்வங்கியின் மூலம் வழங்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 15,273 மகளிருக்கும், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 33 மாணவிகளுக்கும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 397 மாணவர்களுக்கும் வங்கி கணக்கில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்கள் எளிதில் பணம் பெறும் வகையில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவை அளித்து வருகின்றது. நடமாடும் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மற்றும் POS இயந்திரங்கள் வாயிலாகவும் சிறப்பான சேவை அளிக்கப்பட்டு வருகின்றது. அனைத்து கிளைகளிலும் பாதுகாப்பு பெட்டக வசதிகள் உள்ளன.

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முதலாவதாக உருவாக்கப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஒரு மேலாண்மை இயக்குநர், ஒரு முதன்மை வருவாய் அலுவலர், ஒரு பொது மேலாளர், 2 உதவிப் பொது மேலாளர்கள், 23 மேலாளர்கள், 34 உதவி மேலாளர்கள், 93 உதவியாளர்கள், 4 அலுவலக உதவியாளர்கள் ஆகிய 159 பணியாளர்களுடன் செயல்படும்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப. அம்ரித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என். ராஜேஷ் குமார், மாதேஷ், வி.எஸ். மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பி. ராமலிங்கம், கே. பொன்னுசாமி, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்கா மூர்த்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை பேருந்து நிலையம் டேனியில் தாமஸ் தெரு நியாயவிலைக் கடையிலிருந்து முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ஜோதிபுரம் பகுதியில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்குச் சென்று அரிசி,சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், கழக நிர்வாகிகள் சித்திக், விஜிலா சத்யானந்த்,அனிதா உள்பட பலர் உள்ளனர்.